4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. M. நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**MCOP No. 46/2022** நாள்: **13.08.2025** ம.சா.1 – மாசாணி

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை -

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் ஒட்டி வந்ததாக சொல்லப்படும் வாகனத்தில் தண்ணீர் தொட்டியை இறக்குவதற்காக 8 பேர்கள் சென்றார்கள், அதில் எனது கணவரும் சென்றார். எனது கணவர் தண்ணீர் தொட்டி ஏற்றி சென்ற லாரியில் தண்ணீர் தொட்டியின் மேல் அமர்ந்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி லாரியில் ஓட்டுநர் உட்பட 3 நபர்கள் பயணிக்க மட்டும் தான் சட்டப்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகமான பாரத்தை மற்றும் ஆட்களை ஏற்றிச்சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. 23.10.1975 என்னுடைய பிறந்த தேதி என்றால் சரிதான். எனக்கும், எனது கணவருக்கும் 7 ஆண்டுகள் வித்தியாசம் என்றால் சரிதான். எனது கணவரின் வயது மற்றும் வருமானத்தை நிர்ணயிக்கும் ஆவணங்கள் எதுவும் இந்த மனுவில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் அவ்வப்போது கிடைக்ககூடிய வேலையை தான் செய்து வந்தார் என்றால் சரிதான். எனது கணவர் ஒரே முதலாளியிடம் தொடர்ந்த வேலை பார்த்தார். அவ்வப்போது கிடைக்கும் வேலைக்கும் செல்வார். எனது மகள்களுக்கு திருமணமாகிவிட்டது என்று சொன்னால் மூத்த மகளுக்கு எனது கணவர் இருக்கும்போது திருமணமாகிவிட்டது, இளைய மகளுக்கு எனது கணவர் இறந்த பிறகு தான் திருமணமானது. எனது மகள்கள் இருவரும் கணவர் வீட்டில் தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் ஓட்டி சென்ற

லாரியில் பயணம் செய்யும் லோடு மேனுக்கு காப்பீடு செலுத்த வில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . எனது கணவர் அஜாக்கிரதையாக தண்ணீர் தொட்டியின் மீது ஏறி பயணம் செய்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து எனது கணவரின் அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் இழப்பீடு பெற தகுதியில்லாதவர் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/−M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.